<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.
2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24ம் நாள் செவ்வாய் கிழமை

**<u>புதிய இடை நிலை மனு எண். 3/2025</u>**
in
**<u>அசல் வழக்கு எண்.57/2021</u>**

மாரியப்பன் (எ)மாரிக்கண்ணு .... வாதி

... எதிர் ...

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்
மற்றும் நான்கு நபர்கள் ..... பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக கடந்த 17.02.2026–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.ரபீக் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.அழகர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள காரண, காரியங்களை அனுசரித்து, மனுவில் ஆவணங்கள் விபரம் என்ற விபரப்படிக்கான ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 3(a)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

தான் இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி, இதில் மனுதாரர், 5ம் பிரதிவாதிக்காவும் இம்மனுவை தாக்கல் செய்கிறேன் என்றும், வாதியால்

தங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து தங்களது தரப்பு விசாரணை இருந்து வருகிறது என்றும், வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது சில ஆவணங்கள் கைமறதியாக எங்கோ வைத்து விட்டோம் என்றும், அதனால் அந்த சமயத்தில் எதிர்வழக்குரையோடு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அதோடுமட்டுமல்லாமல் தற்போது சில ஆவணங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு கிடைக்கப் பெற்றுள்ளது என்றும், மேற்படி மனுவில் ஆவணப் பட்டியலில் கண்டுள்ள ஆவணங்களை தற்போது காலதாமதமாக தாக்கல் செய்கிறேன் என்றும், மேற்படி காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய உத்தரவிடாவிட்டால் தங்களுக்கு பெருத்த கஷ்ட, நஷ்டமும் ஈடு செய்ய முடியாது இன்னலும், இழப்பும் எற்படும் என்றும், எனவே மனுவில் ஆவணங்கள் விபரம் என்ற விபரப்படிக்கான ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:</u>

மனுதாரர்/4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள சி.பி.சி ஆர்டர் 8 ரூல் 3(a)ன் கீழான மனுவும், அதனுடன் இணைத்து தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானது என்றும், அவற்றையெல்லாம் மனுதார்/4ம் பிரதிவாதியே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து வழக்கரையில் எவ்வித விபரமும் கூறாமல் தற்பொழுது தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றும், வழக்குமூலம் எழுந்ததற்கு பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், இந்த வழக்கின் தோதிற்காக ஏற்படுத்தப்பட்டதாகும் என்றும், வழக்கை இழுத்தப்டிக்க வேண்டும் என்பதற்காக காலதாமதமாக தாக்கல் செய்துள்ள மனுவும், ஆவணங்களும் தள்ளுபடி செய்வதற்கு அருகதையுடையதாகவும் என்றும்,

இந்த மனுவை அனுமதிக்க சட்ட முகாந்திரம் இல்லை என்றும், எனவே மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**3. பிரச்சனைக்கான தீர்வு**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில், இந்த மனுவும் மனுவில் ஆவணங்கள் விபரம் என்ற விபரப்படிக்கான ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபணை தெரிவித்துள்ள போதிலும், இம்மனுவுடன் சேர்த்து ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேலும் இந்த ஆவணங்கள் குறித்து எதிர்மனுதாரர்/வாதிக்கு குறுக்கு விசாரணை செய்ய சந்தர்ப்பம் உள்ளதாலும், மேலும் வழக்கு சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்க்கும் போது மனுதாரர்/4ம் பிரதிவாதி தனது வழக்கை நிருபிக்க ஒரு வாய்ப்பளிக்கும் விதமாக இந்த மனுவை அனுமதியளித்து உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மேற்படி கால தாமதத்தினை ஈடுகட்டும் வகையில் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் இந்த மனுவினை அனுமதிக்க இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர்/4ம் பிரதிவாதி செலவு தொகையாக ரூ.500/– எதிர்மனுதாரர்/வாதிக்கு செலுதத வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 27.02.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.02.24 17:25:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.02.24 17:25:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.